புனிதம் காண்பது பற்றி அச்சம் கொள்ளாதீர், அது, உங்களின் ஆற்றலையோ துடிப்பையோ மகிழ்ச்சியையோ எடுத்துக் கொள்வதில்லை.

- திருத்தந்தை பிரான்சிஸ்

**இன்றைய விவிலிய குறிப்பு:**

எசாயா: 6: 1-2, 3-8

திருப்பாடல்: 138: 1-2, 2-3, 4-5, 7-8

1 கொரிந்தியர்: 15: 1-11

லூக்கா 5: 1-11

**வாரம் ஒரு வசனம்**

**நாம் வெறும் கருவியே**

தொடக்க கால சீடர்களின் தூதுரைப்பணிக்கும், நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தூதுரைப்பணிக்கும் வித்தியாசம் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் இக்காலத்தில் பல கிறிஸ்துவர்கள் இதனை ஒப்புக்கொள்வதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கே அந்த குருத்துவப் பணி, நமக்கில்லை. தீவிரவாதமாக ஆலயப் பணியிலேயே நேரத்தைச் செலவழிக்காதீர். நவீன கால உலகின் சவால்களைச் சமாளிக்க முடியாது என்பதால் ஆலயப் பணி என்று சொல்லி தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறீர்கள். ‘நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!’ (1கொரி.9:16) எனப் புனித பவுல் கூறும் வார்த்தைகள் போதுமானவை.

நற்செய்தியில், கடலில் ஆழத்திற்குச் சென்று வலையை வீசும்படி பேதுருவை இயேசு கேட்டுக் கொள்கிறார். மீன் பிடிப்பதைத் தொழிலாகக் கொண்டவருக்கு, அத்தொழில் பற்றி ஒன்றும் தெரியாதவர் அறிவுரை கூறுகிறார். இதனை நாம் சற்று ஆழமாக சிந்திக்க வேண்டும். தூதுப்பணிக்கு அழைக்கப்பட்டிருக்கும் நமக்கும், ஆழ்கடலில் வலையை வீசும்படி பேதுரு கேட்டுக் கொள்வது போல, ஆழம் தெரியாமல் காலை விடும் அச்சமும் அபாயமும் நமக்குண்டு. தெரியாமல் காலை விடும் அச்சம் நமக்கு இருந்தாலும், இயேசுவை நம்பி பேதுரு செயல்பட்டார். நாளைக்கு உள்ள சவால் என்னவென்று தெரியாதப் போதும், நமது அழைப்புக்கு முதலில் இசைவு காட்டுவோம். பின்னர் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பை நிறைவேற்ற தன்னம்பிக்கை கொள்வோம். தூதுரைப்பணியில் ஈடுபட்டோர் பற்றிய செய்திகள் திருநூலிலும் வரலாற்றிலும் படித்திருக்கிறோம். கடவுள் நமது நங்கூரம் என்பதால் உறுதி கொள்வோம். அவர் நம்மை வழிநடத்துவார்.

தூதுரைப்பணி பயணத்தில் பேதுருவையும் பவுலையும் போல் நமக்கும் குறைகள் இருக்கலாம், ‘இயேசுவே, நான் உம்மை நம்புகிறேன்’ எனக்கூறி, இயேசுவின் வல்லமையில் நமது குறைகளை விட்டுவிடுவோம். இயேசுவின் மீது நம்பிக்கை வைத்தால், **நாம் வெறும் கருவியே** என நாம் உணர்வோம். நற்செய்தி -இயேசு நம்மோடு தமது பணியில் உடனிருப்பார். இறை அழைப்பை உணரும் போது, இதோ நான் ஆண்டவரே - என்று பதில் கூறுவோம்.✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 06/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

10 பெப்ரவரி 2019

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 5ம் ஞாயிறு

திருமுழுக்குப் பெற்று அனுப்பபடுதல்

மாதாந்திர கருப்பொருள்:

**புனிதத்திற்கு அழைத்தல்**

# ஆழத்திற்குத் தள்ளு



அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம் (1யோவான்4:19), இயேசுவுடனான நமது உறவுக்கு அவரே அளவுகாட்டுவது வைத்தார். நிபந்தனையின்றி பெற்றுக் கொண்ட அதே அன்பை, மற்றவர்களிடமும் காட்டுவகாட்டுவது தகுமே. ஒவ்வொரு நாளும் திருப்பலியில் கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளும் போது தூதுரைப்பணி நமக்கும் வருகிறது. கடவுளின் அன்பின் செய்தியை எங்கும் பரப்ப நாம் அனுப்பப்படுகிறோம். நமது தூதுரைப்பணி இதுவே.



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
## *திருமுழுக்கு அளித்து அனுப்புதல்*
*2019 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*
## *புனிதத்திற்கு அழைக்கிறது*

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 5ஆம் ஞயிறு (ஆண்டு 3)** சனி 09-02-2019 - ஞாயிறு 17-02-2019
எசா : 6: 1-8 தி.பா: 138: 1-2, 2-3, 4-5, 7-8 1 கொரி: 15: 1-11 லூக்கா : 5: 1-11
**"தெய்வங்கள் முன்னிலையில் உம்மைப் புகழ்வேன்" - திபா 138**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(இளைஞர்கள்) | **பிப்பரவரி 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் திருப்பலிகளுக்கு பின்னர் நோயாளிகள், முதியோர்களுக்கு விசேட ஆசிர்வாதம் வழங்கப்படும்** |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித யோசேப்பு)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி ஆரம்பபள்ளி 6)<br>திருப்பலி<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்)<br>**<u>சாகா ரந்தாவ் - புனித லூர்து அன்னை சிற்றாலய திருவிழா :</u>**<br>**காலை: 10.00 மணி: செபமாலை/திருவிழா திருப்பலி** |
| திங்கள் | 11 | 6.45 கா | திருப்பலி | |
| செவ் | 12 | 8.30 கா | திருப்பலி | |
| புதன் | 13 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 14 | 6.45 கா | திருப்பலி | |
| வெள் | 15 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணி, திருமணி ஆராதனையும் திருப்பலியும் – வேளாங்கண்ணி சிற்றாலயம் - காடோங்* |

**பொதுக்காலம் 6ஆம் ஞரிறு (ஆண்டு 3)**
எரே : 17: 5-8 தி.பா: 1: 1-2, 3, 4-6 1 கொரி: 15: 12, 16-20 லூக்கா : 6: 17, 20-26
**"ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவர் பேறு பெற்றவர்" - திபா 1**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ரீத்தா) | |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித பியோ)<br>திருப்பலி (ஆ) (புனித கிரகோரி)<br>திருப்பலி<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**<u>2019 *மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*</u>**

1) பங்கு காணிக்கை:
அ) 02/03 பிப்ரவரி 2019 ரிம: 9,066.75
ஆ) சமூக அக்கறைப்பணிக்குழுவினருக்கான காணிக்கை: ரிம:7,973.10
இ) 05/02 சீனப்புத்தாண்டு திருப்பலி ரிம: 5,958.35
தித்தி (சீனப்புத்தாண்டு திருப்பலி) ரிம:868.90
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**<u>2) பங்கு மக்களுக்கு ஓர் நினைவூட்டல்:</u>**
அ) திருப்பலியில் நற்கருணைப் பெற வரும்போது உங்கள் உடைமைகள் குறிப்பாக கைப்பைகள் கவனம். இருக்கைகளில் வைத்துவிட்டு வரவேண்டாம். கூடுதல் கவனத்தோடு இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

ஆ) ஆலய வளாகம்/உணவு விடுதி சுற்றுப்புறத்தில் புகைப்பிடிக்க அனுமதி இல்லை. உங்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றி.

**iv) திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு:** குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்பாக விண்ணப்ப படிவத்தைப் பங்கு அலுவலகத்தில் பூர்த்தி செய்தபின், குருவானவரைச் சந்திக்க தேதியை முன் பதிவு செய்து கொள்ளுங்கள். திருமண முன் தயாரிப்புப் பயிற்சிகள் விரைவில் தொடங்க உள்ளன.

**vi) பங்கு ஊடகப் பணிக்குழு:** இதுவரை பொறுப்பிலிருந்த திரு மைக்கல் சூங் அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிப்போம். இப்போது பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் திரு அல்பர்ட் அவர்களை வரவேற்போம். உங்களுடைய செய்திகளை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். churchofthevisitation@gmail.com or terminate79@gmail.com

**v) <u>தேசிய மொழியில் ஆல்ஃபா பயிற்சி</u>** : பிப்ரவரி 3,10,24 & மற்றும் மார்ச் 3 - நேரம்: பகல் 2.30 - மாலை 6.30 வரை. இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம். தொடர்புக்கு: மரியா - 014- 350 3718 - அனைவரையும் வரவேற்கிறோம்

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித ஜோசப் அதிச வினருக்கு நமது நன்றிகள்

- **<u>சீனப்புத்தாண்டு விருந்து 03-03-2018</u>** இடம்:ரீஜெண்ட் உணவு விடுதி, சிரம்பான். ஒரு மேசை அல்லது ஒரு நபருக்கான டிக்கெட் வாங்கி இதில் கலந்துகொள்ளுங்கள். தொடர்புக்கு: பமேலா 016-630 6169
- **<u>ஒளி/ஒலி கருவிகள் - பாடல் குழுவினரின் மேல் அறை</u>:** இங்கிருக்கும் கருவிகளை திருப்பலி நேரத்தில் கையாளும்போது கூடுதல் கவனத்தோடு பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். பழுது ஏதேனும் ஏற்பட்டால் தயவு செய்து பங்கு அலுவலகத்தில் தெரியப்படுத்தவும்.
- **<u>2019 தவக்காலப் பிரச்சாரம்</u>-** மாமறைமாவட்ட முழு மனித வள மேம்பாட்டு அலுவலகம் ஏற்பாடு செய்துள்ள உரையில் கலந்துகொள்ள அழைக்கிறோம். நாள்:16-02-2019 காலை 8.00 - 1.00 வரை. இடம்: மினவுதல் தேவாலய மண்டபம். அனைத்து அதிச/சோன்/பணிக்குழு பொறுப்பாளர்கள் இதில் அவசியம் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். கூடுதல் விவரங்கள் மற்றும் தொடர்புக்கு: ஜோன் டேவிட்சன் (017-6158 961)
- **<u>சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழுவினரின் கோல்ஃ விளையாட்டுப் போட்டி</u>** நெகிரி செம்பிலான் பணிக்குழுவினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:06-04-2019 காலை 7.00 மணி. சிரம்பான் இண்டர்னேஷனல் கோல்ஃப் கிளப் **(SIGC)**. நபர் ஒருவருக்கு கட்டணம் ரிம:250/- (காலை உணவு/பகல் உணவு/பரிசுப்பை உள்ளடக்கியது.) மற்றும் கண்கவர் பரிசுகள். கோல்ஃப் விளையாடும் அனைவரையும் இதில் கலந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்புக்கு: தயாளன் (017- 8809 454) கிறிஸ்டோபர் கே (019-6216 194)
- **<u>நீலாய், புனித திரேசா ஆலயம்- 2019 தூதுரைப்பணி ஆண்டில் அதிகாரப்பூர்வ தூதுரை ஆலயம்</u>** புனித திரேசா தூதுரைப்பணியின் பாதுகாவலி. இந்த ஆலயத்திற்கு திருயாத்திரை மேற்கொண்டு, திருப்பலியில் கலந்து, செபித்து, தூதுரைப்பணியில் நாமும் பங்குகொள்வோம்.
- **<u>மருத்துவமனை மற்றும் வீடுகளில் இருக்கும் நோயாளிகளின் குடும்பத்தினரின் கவனத்திற்கு:</u>** தயவு செய்து பங்கு அலுவலகத்தில் தெரிவிக்கவும். கூடியமட்டும் குருவானவர்கள் வந்து சந்திப்பார்கள்.
- **<u>நற்கருணைப் பணியாளர்கள் மற்றும் சிறப்புப் பணியில் உள்ளவர்களின் கவனத்திற்கு:</u>** உங்கள் சோன்/அதிச வில் உள்ள நோயாளிகளுக்கு ஒவ்வொரு வாரமும் நற்கருணை வழங்குவதில் முக்கிய அக்கறைக் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **<u>திருப்பலிக்கு முறையாக உடை அணிந்து வருக!:</u>** பங்கு மக்கள், பொறுப்பாளர்கள், திருப்பலியில் பணி செய்வோர் அனைவரும் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு முறையாக உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம். அரைக்கால் சட்டை / உடல் தெரியும் ஆடைகள், பனியன், ஜப்பான் மிதியடி ஆகியவற்றை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய சிறந்த ஆடையை அணிந்து வந்து திருப்பலிக்கு உரிய மரியாதையை வழங்குங்கள்.
- **சோய்ஸ் தமிழ்** (23 - 39 வயது வரையான இளைஞர்களுக்கு) : 22–24 (வெள்ளி – ஞாயிறு) மார்ச் 2019, லூர்து அன்னை தேவாலயம், கிள்ளான். கட்டணம் ரி.ம 130, தொடர்புக்கு : மணிமொழி மரியா 016 328 2791
- **<u>வரவேற்புப் பணிக்குழுவினர்</u> :**
  - திருப்பலியின் போது அதிகமான வரவேற்புப் பணிக்குழுவினர் தேவைப்படுகின்றனர்
  - அதிச/சோன் அளவில் திருப்பலி வழிநடத்தும்போது குறைந்தது 6 பேர் தேவை
  - உங்களின் உடை கண்ணியமாக இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்
  - திருப்பலிக்கு 15 நிமிடத்திற்கு முன்னதாக வரவும்.செப உணர்வோடு பணி செய்யுங்கள்.
  - முகமலர்ச்சியோடு உங்கள் பணியைச் செய்யுங்கள்
  - கூடுதல் விவரங்களுக்கு: மேரி ராஜு அல்லது உங்களுடைய அதிச பொறுப்பாளரை தொடர்புகொள்ளுங்கள்.

- **<u>12-14 பிப்ரவரி</u>** - பங்கு குருவானவர்கள் இல்லங்களைச் சந்திப்பார்கள் (சோன் 13 & 14)
- **<u>16-17 பிப்ரவரி - விண்ணேற்பு ஆலயம், பெட்டாலிங் ஜெயா</u>** - ஆலயத்தின் வைரவிழா கொண்டாட்டத்தையொட்டி நினைவுப்பரிசுகளை விற்பனை செய்ய இங்கு வருகை தருகிறார்கள்.
- **19 & 20 பிப்ரவரி -** குருக்களின் மாதாந்திர தியானம், **APC, K.L.**
- **24 பிப்ரவரி :** தித்தி - திருப்பலி மாலை 4.30